[1981 மார்ச் 27

[முற்பகல் 9—10]

மாண்புமிகு திரு. க. இராமச்சந்திரன்: தலைவரவர்களே எல்லா இடங்களிலுமே அதுபோல இருந்தால், நமக்கு இன்னறக்கு மின்சாரமே வராது. இந்த ஒரே ஒரு இடத்தில்தான் இப்படி ஏற்பட்டிருக்கிறது.

செங்கை மாவட்ட பெயர் மாற்றல்.

*வினா எண் 508—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) செங்கை மாவட்டத்தை அண்ணா மாவட்டம் என்று பெயர் மாற்ற அரசுக்கு ஏதேனும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) இல்லை.

(ஆ) கேள்விககு இடமில்லை.

திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியார் பிறந்த மாவட்டத்திற்குப் பெரியார் மாவட்டம் என்று பெயர் சூட்டியதைப்போல, அறிவுலக மேதை பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பிறந்த மாவட்டமான செங்கல்பட்டு மாவட்டத்திற்கு, ஏன் அண்ணா மாவட்டம் என்று பெயர் சூட்டக் கூடாது? நாம் எல்லாம் அண்ணா நாமம் வாழ்க என்று சொல்கிறோம். ஆகவே அவருடைய நாமம் வாழ்கின்ற வகையில், இனிமேலாவது செங்கை மாவட்டத்திற்கு அண்ணா மாவட்டம் என்று பெயர் சூட்ட அரசு எண்ணுமா என்று அறிய விரும்புகிறேன?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் பிறந்த மாவட்டம் என்று பெரியார் மாவட்டத்திற்கு பெயர் வைக்கிற போது, புதிதாக ஒரு மாவட்டம் உருவாகியது. அதனால் அதற்குப் பெரியார் மாவட்டம் என்று பெயர் சூட்டப்பெற்றது. செங்கல்பட்டு மாவட்டம் ஏற்கனவே இருக்கிற ஒரு மாவட்டம். ஏற்கனவே இருக்கிற ஒரு மாவட்டத்திற்குப் பெயரை மாற்றினால் அதனால் சங்கடங்கள் ஏற்படுமோ என்று அதைப்பற்றி யோசனை வரவில்லை.

1981 மார்ச் 27]

திரு. து. புருஷோத்தமன் : பேரவைத் தலைவரவர்களே, செங்கற்பட்டு மாவட்டத்திற்கு அப்படிப் பெயரை மாற்றினால் எந்த வித எதிர்ப்பும் இருக்காது என்பதை அமைச்சர் அவர்கள அறிவாரா? ஆகவே எதிர்ப்பு இருக்காது என்ற காரணத்தினால் உடனடியாக பேரறிஞர் அண்ணாவினுடைய பெயரால் செங்கை மாவட்டததிற்கு பெயர் இடப்படுவதற்கு ஏற்பாடு செய்யப படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத தலைவரவர்களே, அரசு அதைப்பற்றி ஆலோசிக்கும்.

திரு. த. இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்திற்கு பெரும் தலைவர் காமராஜர் .... (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இராமநாதபுரம் மாவட்டத்திற்குத் தனிக் கேள்வி போட்டுக் கொள்ளுங்கள். இது செங்கல்பட்டு மாவட்டத்தைப் பற்றிய கேள்வி.

கரூர் இராமானுஜம் நகர் புறம்போக்கு நிலத்தில் ஆக்கிரமிப்பு.

*வினா எண். **509—திரு. எம். சின்னசாமி :** மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருச்சி மாவட்டம், கரூர் ராமானுஜம் நகரில் அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு இடத்தில் அனுமதி இன்றி தனியார்கள் கட்டிடம் கட்டுவது பற்றி அரசுக்கு புகார்கள் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம் : (அ) ஆம்.

(ஆ) பொதுப்பணித் துறை அலுவலர்களைக் கலந்து, ஆக்கிரமிப்புக்களை அப்புறப்படுத்துவதற்கு கரூர் கோட்டாட்சியர் தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

திரு. எம். சின்னசாமி : பேரவைத் தலைவரவர்களே, அந்த இடத்திலே. அதற்குப் பக்கத்தில் உள்ள பங்களாவாசிகள் தான் அந்த இடத்தினை தங்களுக்குச் சொந்தமாக ஆக்கிரமிப்பு செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களை அந்த இடத்திலிருந்து அப்புறப்படுத்தி, அங்கே வீடு இல்லாமல் இருக்கும் குடிசை வாசிகளுக்கு அந்த நிலத்தை ஆர்ஜிதம் செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

TRUTH ALONE TRIUMPHS